TC. 36

012/DD/19

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## TRANSLATION TEST – SECOND PAPER – TRANSLATION OF NEWS PAPER REPORT IN TAMIL TO ENGLISH

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்.**

(4 × 25 = 100)

1. பெண்கல்வி

பெண்களை, அன்னை பராசக்தியின் வடிவமாகக் கண்டு வணங்கி, வாழ்த்தி பெண்மைக்குப் பெருமை சேர்த்த நாடு நம் நாடு. பெண்ணாய் பிறத்தல் பாவம் என்று எண்ணிய காலத்தில் பெண்ணாய் பிறத்தல் பெருமை என்று பெண் பிறப்பினைப் பெருமையாக புகழ்ந்தனர் நம் முன்னோர்கள். நாம் பிறந்த நாட்டினை தாய்நாடு என்றும் தாயகம் என்றும் பெருமையோடு போற்றியவர்கள் தமிழர்கள். கண்ணகி, வாசுகி போன்ற கற்புக்கரசிகளையும், ஆதிமந்தியார் மாதவி போன்ற கலைமணிகளையும், மங்கையர்க்கரசி, பூசைத்தாயார், காரைக்கால் அம்மையார் போன்ற அருள்நெறி செவிலியர்களையும், மணிமேகலை போன்ற அறம் வளர்த்த பெண்ணையும், ஒப்புயர்வற்ற வீரப் பெண்மணிகளையும் ஈன்றெடுத்துப் பெரும்புகழ் பெற்றது நம்நாடு. ஆண்டவன் படைப்பில் அரியது ஒன்று உண்டு என்றால் அது பெண் இனம் என்றார் காந்தியடிகள். அடக்கம், பொறுமை, தியாகம், பிறர்நலம் பேணுதல், இரக்கம், அழகு, ஒப்புரவு தொண்டு முதலிய அனைத்தும் அமைந்த ஒன்றே பெண்மையாகும்.

ஓர் ஆணுக்குக் கல்வி அளிப்பது குடும்பத்தில் ஒருவருக்குக் கல்வி அளிப்பதாகும். அதுவே ஒரு பெண்ணுக்குக் கல்வி அளிப்பது என்பது அக்குடும்பத்திற்கே கல்வி அளிப்பது போலாகும். குடித்தனம் பேணுவதற்கும், மக்களைப் பேணுவதற்கும், உலகினைப் பாதுகாப்பதற்கும் பெண் கல்வி வேண்டும் என்று வலியுறுத்துகிறார் பாரதிதாசனார். பெண்கள் கல்வி பெற்றால்தான் புதிய சமுதாயத்தை உருவாக்க முடியும். நல்லறிவு உடைய மக்களை உருவாக்கப் பெண் கல்வி முக்கியம்.

பெண்களுக்குக் கல்வி தேவை இல்லை என்னும் மூடநம்பிக்கை ஏழைப்பெற்றோரிடம் பெருகியுள்ளது. வாழ்க்கைக் கல்வி பெண்களுக்கு வழங்கப்படவில்லை. பெண்கல்விக்கு, மற்றொரு தடை குழந்தைத் திருமணம். பெண்கல்வி மேம்பட மத்திய மாநில அரசுகள் பல திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகின்றன. இதனால் பள்ளிகளில் மாணவிகளின் சேர்க்கை அதிகமானது. பல ஐந்தாண்டுத் திட்டங்களைச் செயல்படுத்திய பின்னர் எழுத்தறிவு பெற்ற பெண்களின் எண்ணிக்கை ஆயிரத்திற்கு 394 என உயர்ந்துள்ளது. பெண் கல்வியால் நாடு வளர்ச்சி அடைவதோடு, அனைத்துத்

[Turn over

துறைகளிலும் பெண்கள் கோலோச்ச ஊன்றுகோலாக அமையும் என்பதும் மறுக்கமுடியாத உண்மை. எனவே பெண்களைப் போற்றுவோம், பெண்களை மதிப்போம், பெண்ணியத்தைக் காப்போம், பெண்கல்வியை உயர்த்துவோம்!

2. சமூக வலைத்தளம்

சமூக வலைத்தளம் என்பது ஒத்த கருத்துடையோர் அல்லது செயற்பாடு கொண்டோரின் சமூகத்தை வளர்க்கவும், அவர்களிடையே உள்ள சமூகப் பிணைப்புகளை வெளிப்படுத்தவும் வழி செய்கின்ற இணையச் சேவை தளம் அல்லது வலைத் தளங்கள் தங்கள் பயனர்கள் தங்களுக்குள் கருத்துகள், செயற்பாடுகள், நிகழ்வுகள், இலக்குகள் நோக்கங்கள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ள வழிசெய்கின்றன. செல்போன் கண்டுபிடிக்கப்பட்டது தான் உண்மையிலேயே தகவல் தொழில்நுட்பப் புரட்சி எனலாம். செல்போன் பேசும் கருவியாக மட்டுமில்லை, பலவிதமான பயன்பாடுகளுடன் இருக்கிறது. உலக அளவில் 150 கோடிக்கும் அதிகமானோர் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்துகிறார்கள். ஃபேஸ்புக் (முகநூல்), ட்விட்டர், மை ஸ்பேஸ் உள்ளிட்ட 10 சமூக வலைத்தளங்கள் உலகில் அதிகம் பயன்படுத்தப்படுபவை எனப் பட்டியலிடப்பட்டுள்ளது. இதில் ஃபேஸ் புக்கிற்கு (முகநூல்) மட்டும் 50 கோடிக்கும் மேலான பயனாளர்கள் இருக்கிறார்கள். சிறுவர்களும், இளைஞர்களும் தான் சமூகவலைத் தளங்களை அதிகமாகப் பயன்படுத்துகின்றனர். இந்தியா, வலைத்தளப் பயன்பாட்டில் ஏழாவது இடத்தில் உள்ளது. இவ்வளவு பேர் பயன்படுத்துவதற்கான காரணம், அது ஒரு சுதந்திர களமாக இருப்பதுதான். உலகமயமாக்கலால் தனித்தனி மனிதர்களாகச் சுருங்கிப் போய்விட்ட சமுதாயத்தை, சமூக வலைத்தளங்கள் ஒன்றிணைக்கின்றன. சமீபத்தில் எகிப்து, லிபியா போன்ற நாடுகளில் நடந்த புரட்சிகளில் சமூகவலைத் தளங்களின் பங்கு முக்கியமானது. தமிழ்நாட்டிலும் நடந்த சில முக்கியப் போராட்டங்களுக்கும் சமூக வலைத் தளங்கள் காரணமாக அமைந்தன.

சமூக வலைத் தளங்களின் வாயிலாக செய்திகளை உடனடியாகத் தெரிந்து கொள்ள முடிகிறது. வேலை வாய்ப்புக் கிடைக்கும் வாய்ப்பும் இருக்கிறது. இதன் வழியாக பராக் ஒபாமா மற்றும் ட்ரம்புடன் கூட நண்பராக முடியும். இந்த அடிப்படையில் இது ஒரு உண்மையான ஜனநாயக அமைப்பு எனலாம். இது ஒரு புறமிருக்க, சமூக வலைத் தளங்கள் இன்றைய சமூகத்தின் மீது ஏற்படுத்தியிருக்கும் பாதிப்புகள் ஏராளம். பெரும்பாலான பயனாளர்கள் 24 மணிநேரத்தையும் சமூக வலைத் தளங்களிலேயே செலவிடுகின்றனர். முன்பின் அறிமுகமில்லாதவர்களிடம், தனிப்பட்ட விவரங்களைப் பகிர்ந்துகொள்ளும்போது அதைத் தவறாகவும் பயன்படுத்தவும் வாய்ப்பு உள்ளது. இப்படியாக முகநூலில் மட்டும் பத்து கோடிக் கணக்குகள் கையகப்படுத்தப்பட்டுள்ளன.

வலைத் தளங்களைப் பயன்படுத்தும் பழக்கம் போதைப் பழக்கத்தைவிட தீவிரமானது. அதிகப்படியான பயன்பாட்டின் காரணமாக உறவுகளிடமிருந்தும் வாழும் சமூகத்திடமிருந்தும் விலகிப் போய் தனியாக வாழ்கிறார்கள்.

எனவே வலை தளங்களை அளவாகப் பயன்படுத்த இளைய தலைமுறையினரை அறிவுறுத்துவோம்.

3. பெண்சிசுக் கொலை

பெண்சிசுக் கொலை என்பது கருவில் இருக்கும் அல்லது பிறந்த குழந்தை பெண் குழந்தையாக இருந்தால் அதனைக் கருவில் இருக்கும் காலத்திலோ அல்லது பிறந்த பின்போ கொன்றொழிப்பதைக் குறிக்கும். கருவில் இருக்கும் பெண் குழந்தையைக் கொல்வது 'பெண் கருக்கொலை' என்றும் பிறந்த பின் கொல்வது 'சிசுக் கொலை' எனவும் வழங்கப்படுகிறது. இந்தியாவில், கிராமம் மற்றும் நகரம் என வேறுபாடின்றி இச்செயல் நடைபெறுகிறது. ஆயினும் கிராமப்புறங்களில் இச்செயல் அதிகமாக நடைபெறுகிறது.

இந்தியா பெண்களுக்குப் பாதுகாப்பற்ற நாடாகக் கருதப்படுகிறது. இந்தியாவில் பெண் சிசுக்களின் இறப்பு விகிதம் ஆண் சிசுக்களின் இறப்பு விகிதத்தை விட அதிகமாக உள்ளது. இதுபோன்ற பெண் சிசுக் கொலையினால், உலகெங்கிலும் ஆண், பெண் விகிதத்தில் ஏற்றத்தாழ்வு நிலை நிகழ்கிறது. வளரும் நாடுகளில் இது மிகவும் அதிகமாகவே காணப்படுகிறது. ஆண், பெண் பிறப்பு இறப்பு விகிதத்தில் காணப்பெறும் ஏற்றத் தாழ்வு காரணமாக பெண்கள் வன்புணர்ச்சிக்கு ஆளாக்கப்படலாம். ஒரு பெண்ணைப் பலர் பங்கிட்டுக் கொள்ளும் நிலை வரலாம் என ஐக்கிய நாடுகள் எச்சரித்துள்ளன.

பெண்குழந்தைகளைவிட ஆண்குழந்தைகள் அதிகம் விரும்பப்படுவதாலும், பெண்குழந்தைகளை மதிக்காத காரணத்தாலும், பெண்குழந்தையைப் பெறுவது செலவினம் எனக் கருதுவதாலும் பெண்சிசுக் கொலை நடைபெறுகிறது.

உலகின் பல நாடுகளில், 100 ஆண்குழந்தைகள் பிறக்கும்போது 105 பெண்குழந்தைகள் பிறக்கின்றனர். ஆனால் இந்தியாவில் 100 ஆண்குழந்தைகளுக்கு 93 பெண்குழந்தைகள் பிறக்கின்றனர். கடவுள் நம்பிக்கை கொண்ட ஒவ்வொரு வீட்டிலும் பெண் குழந்தைகள் மகாலெட்சுமி எனவும், வீட்டின் அதிர்ஷ்ட தேவதை எனக் கருதுவோர் ஒருபுறமிருக்க, பெண் குழந்தைகளைச் சுமையாகக் கருதுவோரும் உள்ளனர்.

இந்தியாவில் நடுத்தர மற்றும் ஏழ்மையான மக்களே அதிகமாக இருப்பதால், பெற்றது முதல் திருமணம் செய்யும் வரை செலவினம் கருதி, மனதைக் கல்லாக்கி பெண் குழந்தைகளைக் கொன்று விடுகின்றனர். மக்களின் இந்த எண்ணத்தை மாற்றப் பல்வேறு நலத்திட்ட உதவிகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

வரதட்சணை ஒழிப்புச் சட்டம்

கருவிலேயே பாலினம் தெரிந்து கொள்வதற்கு எதிரான சட்டம்

தொட்டில் குழந்தை ஆதரவான திட்டம்

பெண் கல்விக்கு ஆதரவான சட்டம்

பெண்ணுரிமைக்கு ஆதரவான சட்டம்

கல்வி, திருமணம் குழந்தைப்பேறு எனப் பல்வேறு காலகட்டங்களில் பெண்களுக்கு வழங்கப்படும் உதவி.

4. சர்தார் வல்லபாய் பட்டேல்

இன்றைய ஒருங்கிணைந்த இந்தியாவை உருவாக்கியதில் முக்கிய பங்காற்றிய இரும்பு மனிதர் என்று அழைக்கப்பட்ட சர்தார் வல்லபாய், குஜராத்தில் லேவா பட்டேல் சமூகத்தில் விவசாய குடும்பத்தில் பிறந்தவர். படிப்பில் கெட்டிக்காரர். தனக்குள்ளாக வழக்கறிஞர் ஆக வேண்டுமெனத் தீர்மானித்து இங்கிலாந்து சென்று வழக்கறிஞர் படிப்பு படித்தார். அகமதாபாத்தில் வக்கீல் தொழில் நடத்தியபோது, உள்ளூர் மக்களின் பிரச்சனைகளுக்கு உதவி பிரபலமானார். 1917 ஆம் ஆண்டு மாநகராட்சித் தேர்தலில் வெற்றி பெற்றார். சுதேசி இயக்கம் உச்சத்தில் இருந்தபோது காந்திஜியின் உரையைக் கேட்டவர். வக்கீல் தொழிலை உதறி சுதேசி இயக்கத்தில் இணைந்தார். குஜராத்தில் கேடா என்ற இடத்தில் பயங்கர பஞ்சம். ஆங்கிலேய அரசிடம் வரிவிலக்கு கேட்டு விவசாயிகள் போராடினர். அரசு பணியாததால் காந்தி, படேல் தலைமையில் வரிகொடாமைப் போராட்டம் வெடித்தது. அரசு பணிந்தது. வரி ரத்தானது. படேலின் முதல் வெற்றி இது. பார்டோலி என்ற இடத்தில் விவசாயிகளின் நலன்காக்க நடைபெற்ற மற்றொரு போராட்டத்திலும் படேலுக்கு வெற்றிக் கிடைத்தது. அப்போதிலிருந்து மக்களால் ‘சர்தார்’ என அன்போடு அழைக்கப்பட்டார். அதன்பிறகு போராட்டங்களும், சிறைவாசமும் அவருக்கு வாடிக்கையாவிட்டது.

சுதந்திரப் போராட்டத்தின் சிப்பாய் என்று அழைக்கப்பட்டார். இந்திய விவசாயிகளின் ஆன்மாவாக கருதப்பட்டார். நவீன இந்தியாவை உருவாக்கியவர்களில் முக்கியமானவர். இந்தியாவின் சுதந்திரதினம் நெருங்கிவந்து கொண்டிருந்தவேளை, அமைச்சரவையை எப்படி அமைக்கலாம் என்று ஆலோசனைகள் மும்முரமாக இருந்த சமயத்தில் 1947–ம் ஆண்டு ஆகஸ்டு முதல் நாளன்று, படேலுக்கு நேரு கடிதம் எழுதினார். “ஓரளவு சம்பிரதாயங்கள் கடைபிடிக்க வேண்டும் என்பதன் அடிப்படையில் மத்திய அமைச்சரவையில் உங்களை சேர்த்துக் கொள்வதற்கான முறையான அழைப்பு விடுப்பதற்கான கடிதம் இது. ஏனெனில் நீங்கள் நம் அமைச்சரவையின் வலுவான தூண்”. நேருவின் இந்த கடிதத்திற்கு ஆகஸ்ட் 3–ம் தேதியன்று பட்டேல் பதில் எழுதினார். “அமைச்சரவையில் இணைவதற்கான அழைப்பு விடுத்த உங்கள் கடிதத்திற்கு நன்றி. நம் இருவருக்கும் இடையிலான பாசமும், அன்பும் முப்பது ஆண்டுகளாக தொடர்கிறது. நம்மிடையே சம்பிரதாய நடைமுறைகளுக்கு எந்தவித அவசியமுமில்லை. எனது வாழ்வின் எஞ்சியுள்ள காலம் முழுவதும் தங்களுக்குச் சேவை செய்ய விரும்புகிறேன். நாட்டின் லட்சியத்தை நிறைவேற்ற அப்பழுக்கற்ற முழுமையான விசுவாசத்தைக் காட்டுவேன்”.

சுதந்திர இந்தியாவின் முதல் உள்துறை அமைச்சராகவும், துணை பிரதமராகவும் பணியாற்றினார். நாடு முழுவதும் துண்டு துண்டாக மன்னராட்சி நடந்து கொண்டிருந்த 565 ராஜ்ஜியங்களை ஒன்றிணைத்ததுத்தான் உள்துறை அச்சராக அவர் ஆற்றிய முதல் பணி.

---